DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 12/2023**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜேந்திரன் | Father Name – | வெள்ளைச்சாமி |
| Age | 52 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்குரை சொத்தில் எந்த வருடத்திலிருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் 2010 ம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு வழக்குரை சொத்தும் அதற்கு அருகில் உள்ள பிரதிவாதியின் சொத்தும் எந்த பௌதீக அமைப்பில் இருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சர்வே எண்.737/2 யைப் பொறுத்து வழக்குரையில் எந்த பரிகாமும் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து மட்டும் தான் வழக்குரை சொத்து விபரத்தில் காட்டியுள்ளேன் என்றும், சந்து பகுதியை வழக்குரை சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. பிரதிவாதி எவ்வளவு வருடங்களாக வழக்குரை சொத்தின் அருகே குடியிருந்து வருகிறார் என்றால் நான் கிரையம் வாங்கிய போது பிரதிவாதியின் தம்பி செந்தில்குமார் குடியிருந்து வந்தார், 2014 ம் ஆண்டு முதல் பிரதிவாதி சரவணன் குடியிருந்து வருகிறார். பிரதிவாதியின் குடும்பத்தினர் பிரதிவாதியின் முப்பாட்டனான அருணாச்சலம் சேர்வை காலத்திலிருந்து சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் பொதுசந்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து ஆழ்துளை கிணறும், சன்சேடும் வைத்துள்ளார்.

3. நீதிமன்ற ஆணையர் வரைபடத்திலோ அல்லது நில அளவையர் வரைபடத்திலோ பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று காட்டியுள்ளார்களா என்றால் காட்டியுள்ளார். பிரதிவாதி அவர் ஏற்கனவே குடியிருந்து வந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், அதில் சில மாற்றங்களை பிரதிவாதி செய்தார். பிரதிவாதி எந்த வருடம் மாற்றங்கள் செய்தார் என்றால் 2025ம் வருடம் செய்தார், அவர் மாற்றங்கள் செய்யும் போது இந்த வழக்கு நிலுவையில் இருந்தது. அவ்வாறு பிரதிவாதி மாற்றம் செய்ததுபோல் எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீடு 100 வருடங்களுக்கு முன்பாக எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில் தான் தற்போதும் உள்ளது என்றால் அது பற்றி என்னால் சொல்ல முடியாது. 1937ம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையில் எந்த அளவீடுகள் இருந்ததோ அதே அளவீடுகள் தான் தற்போதும் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் பிரதிவாதியின் சொத்தில் உரிமை கோரவில்லை, பொது சந்தில் தான் உரிமை கோருகிறேன்.

4. 1994ம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையிலும் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் அளவுகள் தற்போது உள்ள படி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியும் அவரது சகோதரரும் 2013ம் ஆண்டு செய்து கொண்ட பாகப்பிரிவினையிலும் தற்போது உள்ள அளவுகள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது உள்ள கட்டிட அமைப்பு இருப்பதாக 2013ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் இணைப்பு 1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்திலோ அல்லது வழக்குரையிலோ நான் சொல்லும் பொது சந்தின் நீள அகலம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5. பொது சந்தின் நீள அகல அளவுகள் குறித்து மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் பொது சந்தில் ஜன்னலும், வென்டிலேட்டரும், ஆள்துளை கிணறும் ஆக்கிரமிப்பு செய்து

வைத்துள்ளதாக மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆக்கிரமிப்புகளின் நீள அகலம் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி புதிய கட்டுமானங்கள் எதுவும் செய்யவில்லை என்றும், அதனால் தான் அந்த ஆக்கிரமிப்புகளிள் அளவீடுகளை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 18.04.2024 ம் தேதி தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையும், 25.09.2025 ம் தேதியும் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை என்று இரண்டு அறிக்கைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிக்கைகளிலும் இரண்டு விதமான விபரங்கள் உள்ளது என்றால் சரிதான்.

6. 18.04.2024 ம் தேதி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை ரத்துசெய்ய கோரி நான் மனு எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதி வாதி ஒரு மாற்று திறனாளி என்றால் சரிதான். பிரதிவாதியால் ஒருவரின் உதவியுடன் தான் மூன்று சக்கர வாகனத்தில் அமர்ந்து வெளியே செல்ல முடியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் மூன்று சக்கர வாகனத்தை அவரது வீட்டின் முன்பாக நிறுத்துவதை தவிர்த்து அவர் வேறு மார்க்கம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியால் தனித்து இயங்கி மூன்று சக்கர வாகனத்தை வேறு எங்கு நிறுத்த முடியும் என்றால் பிரதிவாதியால் தனியாக அந்த மூன்று சக்கர வாகனத்தை எங்கும் நிறுத்த முடியாது, அவரது குடும்பத்தினர் துணையுடன் அந்த வாகனத்தை வெளியே நிறுத்திக்கொள்ளலாம். பிரதிவாதிக்கு இடுப்புக்கு கீழே எந்த செயல்பாடுகளும் கிடையாது என்றால் சரிதான்.

7. பிரதிவாதி மூன்று சக்கர வாகனத்தை வீட்டின் முன்பு நிறுத்துவது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் சட்ட விரோதமாக பிரதிவாதி தனது வீட்டின் முன்பு வாகனம் நிறுத்துவதை தடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்காததால் தான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின்

முரணாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களின் மூலம் இந்த நீதிமன்றத்திற்கு என்ன சொல்ல வருகிறேன் என்றால் பிரச்சனைக்குரிய இடத்தை நீதிமன்றத்திற்கு காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

8. தாவா பொதுச்சந்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 8 வீடுகள் உள்ளது. மேற்படி 8 வீடுகளில் உள்ள நபர்களில் யாரும் பிரதிவாதி தாவா சந்தை ஆக்கிரமிப்பு செய்து இடைஞ்சல் செய்வதாக புகாரோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மேற்படி பொது சந்தில் என்னுடைய வீடும் பிரதிவாதியின் வீடும் தான் கடைசியில் உள்ளது அதனால் எனக்கு மட்டும் தான் பாதிப்பு. பிரதிவாதி அவரது பூர்வீக சொத்தில் பூர்வீக அமைப்பில் தான் குடியிருந்து வருகிறார் என்றும், அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட விரோதங்களுக்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல்செய்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.30 15:53:29 +0530

District Munsif,
Bodinayakanur.